# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)

**சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நளின் பண்டார ஜயமஹ
அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *44 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 10.00**

## சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)

## சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

“சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகால வரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த “சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றத்தின் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர்

''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்)''சம்பிக பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம்'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப் பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) இனம், மதம் அல்லது சாதி பற்றிய ஏதேனும் குறிப்பீடுகள் இன்றி கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்தியில் உதவுதல் அத்துடன் பலதரப்பட்ட விழாக்கள் மற்றும் போட்டிகளை நடாத்துதல் ;

(ஆ) தேவையிலுள்ள பாடசாலையின் சிறுவர்களுக்கு தமது கல்வியைத் தொடர்வதற்கு அவர்களை இயலச்செய்வதற்கு பரிசில், புலமைப்பரிசில் மற்றும் உதவிகளை அளித்தல், ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமுகமளிப்பதற்கு அவர்களை ஊக்குவித்தல், அவர்களின் கல்வி, கலாசார மற்றும் அறிவியல் செயற்பாடுகளுக்கு உதவுதலும், அத்துடன் நிரந்தர மற்றும் நடமாடும் நூல் நிலையங்களைத் தாபித்தலும் ;

(இ) கிராமம் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள இயற்கை வளங்களைக்கொண்டு அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் ;

(ஈ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள ஒத்த கழகங்களுடன் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும், நட்புறவையும் மேம்படுத்துதல் ;

(உ) உயரிய இலாபத்தைப் பெறும் நோக்குடன் புதிய தொழினுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய மற்றும் மீன்பிடித்துறைகளை அபிவிருத்தி செய்தல் ;

(ஊ) சூழலைப் பாதுகாப்பதற்கும், முகாமை செய்வதற்கும், பேணுவதற்குமான கருத்திட்டங்களைத் தாபித்தலும் அவற்றைப் பேணுதலும் ;

(எ) உயர்கல்வி நிறுவனங்களை வலுப்படுத்தவும், உயர் கல்வியை மேம்பாடு செய்வதற்கும், ஆராய்ச்சிகள் மற்றும் புலமைப்பரிசில்கள் வழங்கவும் ஏற்பாடு செய்தல்;

(ஏ) இலங்கையில் வாழும் பல்வேறுபட்ட இனங்களுக் கிடையே இன ஒற்றுமையையும் அவர்களைப் பலப் படுத்தும் நோக்கத்துடன் சமூக மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(ஐ) பெண்கள், சிறுவர்கள், அங்கவீனர்கள் மற்றும் ஏழைகள் மத்தியில் சுபீட்சத்தை உருவாக்குதல் ;

(ஒ) மனித நேயம், விளையாட்டு, வரலாற்று மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தல் ;

(ஓ) நூல்நிலையங்களை தாபித்துப் பேணுதல் அத்துடன் புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள், பருவகால வெளியீடுகளை வாங்குவதற்கு ஒப்பப்பணம் அளித்து அவற்றை நூலகங்களுக்கு வழங்குதல் ;

(ஔ) வறிய, கைவிடப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட ஆட் களுக்கான மருத்துவ நிவாரணங்கள் மற்றும் உணவு வகைகளை வழங்குதல், இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் முதியோர்களுக்கான வீடுகளைத் தாபித்தலும் பராமரித் தலும், சிறுவர் இல்லங்கள் அமைத்தலும் அத்துடன் சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கான நாள் கவனிப்பு நிலையங்களைத் தாபித்தலும், பராமரித்தலும் ;

(க) வீதி அபிவிருத்தி அத்துடன் வீடமைப்புத் திட்டங்கள் என்பனவற்றின் நிறைவேற்றுதலையும், வைத்திய சாலைகள், அருங்கலை கல்வி நிலையங்கள் மற்றும் கல்வி நிலையங்கள், பாடசாலைகள், சமுதாய நிலையங்கள் என்பவற்றை நிர்மாணித்தலையும் மேம்படுத்தலையும், பட்டினங்களினதும் கிராமங்களினதும் அபிவிருத்தி நோக்கத்திற்காக அத்தகைய செயற்பாடுகளைப் பொறுப்பேற்றல் ; அத்துடன்

(ங) ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தலும், ஒத்துழைத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் உட்பட ஏழுபேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரான கௌரவ சம்பிக பிரேமதாச பணிப்பாளர் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் தவிசாளராகப் பதவியை வகிக்கின்ற ஆளின் குடும்ப உறவினர் பணிப்பாளர்கள் சபையின் அடுத்த தவிசாளராக வருதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர் தவிர்ந்த பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினரொருவர் இறப்பினால், பதவி விலகலால், முன்னதாகவே தமது பதவி வெற்றிடமானாலொழிய நான்கு ஆண்டுகாலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும். பணிப்பாளர்கள் சபையில் இறப்பின்

அல்லது பதவிவிலகலின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, புதிய உறுப்பினர் ஒருவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்ப நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய உறுப்பினர் நான்கு ஆண்டுகாலப்பகுதிக்கு பதவிவகித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்கள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனம் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்கும் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்

(அ) உறுப்பினர்களை சேர்த்தல், உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பாண்மைக் கட்டணம், உறுப்பினர்களை அனுமதித்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களை கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் நியமனங்கள், தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஈ) பணிப்பாளர் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் ;

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்த வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான மன்றத்தின் எல்லத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** *(1)* கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் கொடைகள், அன்பளிப்பு, நன்கொடை, மரணசாசன தத்துவக் கையளிப்பு, கைமாற்றல்கள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் அல்லது ஏதேனும் நிதிசார் முதலீடுகள் என்ற வகையில் இதனகத்து முன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தினது நிதியத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லா பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**9.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலாகுதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தால் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவமுடையதாதல் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந் தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப் பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படு தல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் கலைக்கப்படும்பட்சத்தில் அல்லது அதற்கு உடன்முன்னர் கூட்டுத் தாபனத்தின் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செல வினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாப னத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் ‘‘தகைமைபெற்ற கணக்காய்வாளர்’’ என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**13**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் வேறு அலுவலரொருவர் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்